**2025 ஆகஸ்ட் மாதம் 26 – ஆம் தேதி செவ்வாய்கிழமை**

**கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றம், தேனி**

**O.S. நெம்பர் : 31/2019**

O.S. No.: 31/2019 – பவுன்ராஜ் DW2 26.08.2025

த/பெ.திருமுலு செட்டியார்

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 7 முதல் 9 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:–**

நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்திலுள்ள விபரங்கள் எனக்கு தெரியும். 7 முதல் 9 வரையிலான பிரதிவாதிகள் தங்கள் மீதும் தங்கள் வகையறாக்கள் மீதும் வழக்கு தாக்கல் செய்திருந்தார்கள் என்றால் சரிதான். அவ்வாறு வழக்கு தாக்கல் செய்த பின்பு அவர்களுடன் சமரச பேச்சுவார்த்தை நடைபெற்று அவர்கள் ஒப்புக்கொண்டார்களா என்றால் சரிதான். எனது தாயார் எனக்கு தானசெட்டில்மென்ட் பாத்தியப்படுத்திக்கொடுத்த சொத்தை நான் அனுபவித்து வந்து அந்த சொத்தை 17 ம் பிரதிவாதியான எனது மனைவிக்கு கிரைய ஆவணம் பிறப்பித்துக்கொடுத்துள்ளேன் என்றால் 17 ம் பிரதிவாதியிடமிருந்து நான் வாங்கியிருந்த பணத்திற்காக அவருக்கு கிரையம் செய்து கொடுத்தேன். மேற்படி கிரைய சொத்தை நாங்கள் இருவரும் சேர்ந்து அனுபவித்து வருகிறோம் என்றால் இல்லை, 17 ம் பிரதிவாதி மட்டும் தனித்து அனுபவித்து வருகிறார். எனது தாயார் சின்னம்மாள் கிரையம் பெற்ற சொத்தை எனக்கு பெயரளவில் பதிந்து கொடுத்துள்ளார் என்று சொல்கிறார்கள் என்றால் அவர்கள் மனப்பூர்வமாக சுயநினைவோடு, மற்றவர்கள் தூண்டுதலின்றி, தானாக முன்வந்து, எனக்கும், 1 ம் பிரதிவாதிக்கும் தானசெட்டில்மென்ட் எழுதிக்கொடுத்தார். நானும், 1, 3 பிரதிவாதிகளும் சேர்ந்து 1992 ம் வருடம் ஏற்படுத்திக்கொண்ட பாகப்பிரிவினை ஆவணத்தில் 7 முதல் 9 பிரதிவாதிகளையும், வாதியையும் தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்றால் எனது தந்தையின் இறப்பிற்கு பின்பு எங்களுடைய குடும்பத்தில் மூத்த உறுப்பினரான வாதியின் தந்தை ஜெகநாதன் அவர்கள்

எங்களுக்கு உடனிருந்து எங்களை வழிநடத்தினார், அவரின் வழிக்காட்டுதலின்பேரில் வாதி அவருடைய மகனான 3ம் பிரதிவாதி இருவருக்கும் சேர்ந்து பாகப்பிரிவினை பத்திரத்தில் அவருடைய ஆலோசனையின்பேரில் வாதியையும் விட்டுவிட்டு, 7 முதல் 9 பிரதிவாதிகளை கட்சியாக சேர்க்கவில்லை. 1992ம் வருட பாகப்பிரிவினை பத்திரத்தில் வாதியின் பெயர் சேர்க்கப்பட்டு அடிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. கடந்த 33 வருடங்களாக நானும், 1 முதல் 3 பிரதிவாதிகளும் 1992ம் வருட பாகப்பிரிவினை பத்திரத்தில் கண்ட சொத்துக்களை அவரவர் அனுபவித்து வருகிறோம் என்றால் சரிதான். எனது சகோதரர் பிச்சைமணி இறப்பிற்கு பிறகு அவரது மகன் நாகேந்திரமணி மற்றும் வாதி ஆகியோரை குடும்பத்திலிருந்து ஒதுக்கிவிட்டோம் என்றால் சரியல்ல, 3ம் பிரதிவாதி நாகேந்திரமணி B.Pharm படிக்க வேண்டும் என்று சொன்னபோது, எங்களுக்கு தெரிந்தவர்களிடம் பணம் வாங்கி அவரை நானும், 1ம் பிரதிவாதியும் சேர்ந்து கல்லூரியில் படிக்க வைத்தோம். அதன்பிறகு பெருமாள்மலையில் மெடிக்கல் வைக்க வேண்டும் என சொன்னபோது, தெரிந்தவர்களிடம் பணம் உதவி கேட்டு மெடிக்கல் வைத்து கொடுத்தோம். வாதியும், 3ம் பிரதிவாதியையும் எங்கள் உறுப்பினராகவே நடத்தி வந்தோம். நானும், 1ம் பிரதிவாதியும் எனது தாயாரிடமிருந்து தானசெட்டில்மென்ட் எழுதி வாங்கிய பிறகு, அவரை கவனிக்கவில்லை என்றும், 7 முதல் 9 பிரதிவாதிகள் தான் எனது தாயாரை பராமரித்தார்கள் என்றால் சரியல்ல. எனது தாயார் உடல்நிலை பாதிக்கப்பட்டபோது, மருத்துவம் மற்ற அவருடைய அனைத்து செலவினங்களையும் நானும், 1ம் பிரதிவாதியும் சேர்ந்து செலவு செய்தோம். 7 முதல் 9 பிரதிவாதிகளை பொறுத்து வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் பொய் வழக்கு.

<u>18 முதல் 20 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>

இவ்வழக்கில் 7ம் லக்க சொத்தானது நெடுஞ்சாலை விரிவாக்கத்துறைக்கு தேவைப்பட்டதால் 19ம் பிரதிவாதியால் தேனி மாவட்டம்,

தேனி வட்டம், ஊஞ்சாம்பட்டி கிராமம், சர்வே எண்.437–ல் 2797 சதுரமீட்டர் ஒருபகுதியாகவும், 3598 சதுரமீட்டர் இன்னொரு பகுதியாகவும் நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டது என்றால் சரிதான். ஆர்ஜிதம் செய்யப்பட்ட 2797 சதுரமீட்டரை பொறுத்து அதற்கான இழப்பீட்டு தொகை ரூ.1,14,289/– நிர்ணயம் செய்யப்பட்டு, அந்த தொகையை பெறுவதற்கான உரிய ஆவணங்களுடன் ஆஜர் உரிமையாளர் T.சந்திரசேகர் உரிமை கோரியதால் தேனி, இந்தியன் ஓவர்சீஸ் வங்கி கிளை காசோலை எண்.708052 மூலம் மேற்படி தொகை ரூ.1,14,289/– 22.03.2013ம் தேதி சந்திரசேகருக்கு வழங்கப்பட்டுள்ளது என்றால் அது சம்பந்தப்பட்ட விபரம் எனக்கு தெரியாது. மற்றொரு பகுதியான 3598 சதுரமீட்டருக்கான இழப்பீட்டுத் தொகை ரூ.4,39,869/– தொகை கணக்கீடு செய்யப்பட்டு, நில உரிமையாளர்களுக்கு வழங்கப்படுவதற்காக தயாராக உள்ளது என்று சொன்னால் தெரியாது. மேற்படி பணம் அரசு வைப்பீட்டில் உள்ளது என்றும், அதற்கு இடையிலேயே வழக்கு தாக்கல் செய்யப்பட்டதால் அந்த பணம் யாருக்கும் ஒதுக்கப்படாமல் அரசு வைப்பீட்டிலேயே இருந்து வருகிறது என்று சொன்னால் சரிதான்.

**1, 16 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை** – ஒத்திவைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 26.08.2025 அன்று செவ்வாய்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

SANKAR Digitally signed by SANKAR Date: 2025.08.26 18:55:28 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி. தேனி.
26.08.2025.